2003 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலிருக்கும் காலிப் பணியிடங்கள் எத்தனை என்பதையும், கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு அந்தக் கூட்டுறவு வங்கிகளிலேயே தற்காலிகமாக வேலை பார்த்திருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும், காலியாக உள்ள இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 88,716 பணியாளர்கள் இன்றையதினம் கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே, உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் இன்றைக்கு எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலே பல்வேறு நிலைப்பாடுகளின் அடிப்படையில், தகுதியில்லாதவர்கள் 2,851 பேராகவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் அல்லாது நேரடியாகவே வேலையைப் பெற்றவர்கள் 65 பேராகவும் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற வகையிலேதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், இன்றையதினம் பணி வரன்முறைகளை எல்லாம் சீர்செய்கிற வகையிலே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 191, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

191—

பாதாளச் சாக்கடை

***10252—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 7

(அ) அண்ணாமலை நகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) பாதாளச் சாக்கடைத் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) இத்திட்டம் நிறைவேற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) அண்ணாமலை நகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடர்பாகக் கோரிக்கை ஏதும் வரப்பெறாததால் நடவடிக்கை ஏதுமில்லை.

முற்பகல் 10-50

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அண்ணாமலை நகர் பேரூராட்சியானது மிக முக்கியமான பேரூராட்சியாகும். அங்கே 15 ஆயிரத்திற்கும் மேல் ஜனத் தொகை உள்ளது. அதற்கு மேலாக, மிகப் பெரிய பல்கலைக்கழகமான அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடைபெற்று வருகிறது. அந்தப் பல்கலைக்கழகத்தில், 10 ஆயிரத்திற்கும் மேல் மாணவர்கள் படிக்கிறார்கள். தொலைதூரக் கல்வி மூலமாக 30 ஆயிரத்திற்கும் மேல் மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி அந்தப் பகுதிக்கு வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக, இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி என்ற மருத்துவக் கல்லூரியும் ஆயிரம் படுக்கைகள் கொண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரை வெளியேற்றிட, இந்தக் கேள்வியின் மூலமாக, இதனையே கோரிக்கையாக வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்திட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை நகர், சிறப்பு நிலைப் பேரூராட்சியாகும். மொத்த மக்கள் தொகை 10,304 ஆகும். மேலும், பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த சுமார் 20 கோடி ரூபாய் என்று

மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நிதி வசதி தற்சமயம் பேரூராட்சியிலே இல்லை. கழிவு நீரைச் சேகரித்து, சுத்திகரிப்புச் செய்ய தேவையான இட வசதியும் இல்லை என்பதால், இப்பேரூராட்சியில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசம் ஏதுமில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகம், இதற்காக ஒரு நிரந்தரத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு உதவி செய்வதற்காகத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய, மாவட்டத்தினுடைய அமைச்சர். அவர் பல்வேறு காலகட்டங்களிலே, அந்தப் பேரூராட்சியிலே பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகத்தோடு பேசி, நிதி வசதி போதிய அளவு இல்லை என்றாலும், அரசும், நிர்வாகமும் சேர்ந்து, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை. தற்போது நகர்ப்புறப் பேரூராட்சிகளில், பயனாளிகள் பங்குத் தொகை முழுமையாக வரவேற்கப்பட வேண்டும். அப்படி வரவேற்கப்பட்டால், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், பயனாளிகளுடைய முழுப் பங்களிப்புத் தொகையின் வாயிலாக இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும் பரிசீலனையில் உள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

192—

கழிவு மூலம் மின்சாரம்

***20312—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—